**எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியம் - 2022**

**-------------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயங்கள் அழுத்திச் சொல்லல்

நிதியத்திற்கு தெடர்ந்தியங்கும் தன்மை இல்லையென முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர் ஒருவரான பொது முயற்ச்சிகள் திணைக்ளத்தின் பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு அறிவித்திருந்ததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலமும் அதை பற்றி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், இந்த நிதியத்தை இரத்துச் செய்வதற்காக துரிதமாக எதிர்காலத்தில் அமைச்சரவைக்கு பிரேரனையொன்றை முன்வைக்க உத்தேசித்துள்ளதாகவும், அதனூடாக நிதியத்தை இஸ்தாபித்தல், அதன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பொறுப்புக்கள் தீர்ப்பனவு தொடர்பாக பொது திறைசேரியினால் பெறுப்பேற்றல், கலைத்தல் போன்றவை தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் என பொத முயற்ச்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2021 நவம்பர் 25 ஆம் திகதி கணக்காய்விற்கு அறிவித்திரிந்த போதும், 2023 மார்ச் 24 ஆம் திகதி வரையும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விலை உறுதிப்படுத்தல் நிதியமொன்றை ஏற்படுத்துவதன் எதிர்பார்த்த நோக்கமாவது உலக சந்தையில் விலை அதிகரிக்கும் | இந் நிதியத்தை ஆரம்பிக்கும் முற்பணமாக நிதி அமைச்சரின் இலக்கம் MFE/ERD/17/CM/2020/072 | உலக சந்தையில் எரிபொருள் விலை மாறுவதற்கு ஒப்பாக உள்நாட்டு |

போது மற்றும் குறையும் போது ஏற்படும் உள்நாட்டு விலை ஏற்ற இறக்கத்தை கட்டுப்படுத்தி நிலையான விலையொன்றை பேணிச் செல்லவதாகும். உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்திருக்கும் போதும் இறக்குமதியின் போது மிகை அறவீடு நிலவிய விலைக்கு ஏரிவொருள் விற்பனை செய்ததால் 2020 மார்ச் முதல் 2021 சனவரி மாதம் வரையான காலத்தினுள் எரிபொருள் விலை உறுதிப்படுத்தும் நிதியம் ரூபா 22,434,531,371 ஆன திரண்ட தேறிய மிகையொன்றை ஈட்டி இருந்தது. இம் மிகையை உலக சந்தையில் எரிபொருள விலை அதிகரிக்கும் போது உள்நாட்டு விலையை உறுதியாக பேணிச் செல்ல திரவத்தன்மை சொத்தாக பேணிச் செல்ல முடியுமாக இருந்த போதும், அமைச்சரவை தீர்மானத்தில் அது பற்றி குறிப்பிடப்பட்டு இருக்காததுடன் அங்கு வழங்கியிருந்த அங்கீகாரம் பிரகாரம திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தில் இருந்து கிடைத்த நிதியையும் பயன்படுத்தி நிதியிலிருந்து ரூபாய் 48 பில்லியன் தொகையானது மின்சார சபைக்கு மூலதனப் பங்களிப்பாக 2020 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

மேலும், நிதியமைச்சின் செயலாளரின் அங்கிகாரத்துடன் மற்றும் எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியக் குழுவின் இணக்கப்பாட்டுடன் எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் முதலீடாக குறிப்பிட்டிருந்த ரூபா 48 மில்லியனான மின்சார சபையின் மூலதன பங்களிப்பு சொத்திலிருந்து ரூபா 22,434,281,242 ஆன எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிலிட்டு கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மின்சார சபையின் மூலதன பங்களிப்பு சொத்தின் சேமிப்பு ரூபா 25,565,718,758 பெறுமதியில் ரூபா 24,543,438,158 திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 25,565,718,758 ஆன பொறுப்புக்களை கணக்குகளில் பதிலீடு செய்து எஞ்சிய ரூபா 1,022,280,600 ஆன தொகை மற்றும் 2022.03.31 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் புத்தகப் பெறுமதி ரூபா 47.47 மில்லியனான (முகப் பெறுமதி ரூபா 50 மில்லியனான) தொகையொன்றை திறைசேரி பிணைமுறிகளை விநியோகித்து பெற்றுக் கொண்டு அத் தொகை மற்றும் மிகை அறவீடுத் தொகையின் ஒரு பகுதியுடன் ரூபா 48 மில்லியன் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டதுடன் அந்த ரூபா 48 மில்லியன் நிதியை மாத்திரம் சரியாக நிதியத்தினால் வழங்கிய மூலதன பங்களிப்பாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே, இந்த ரூபா 48 மில்லியனை செவிட்டு இலங்கை மின்சார சபையினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உள்ள பொறுப்பை விடுவிக்க வேண்டியமை குறித்த அமைச்சரவை பத்திரத்தின் நிபந்தனையொன்றாகும்.

எரிபொருள் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துவது முக்கிய நோக்கமாகும். அதன் பிரகாரம், 2020 ஆண்டினுள் மற்றும் 2021 சனவரி ஆரம்ப காலப் பகுதியினுள் தொடர்ந்து உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்ததன் முன்னால் கடந்த எரிபொருள் விலை திருத்தம் வரை விலையை உறுதியாக பேணிச் செல்ல முடிந்தது.

எரிபொருள் விலை உறுதிப்பாட்டிற்காக நிதியத்தை பயன்படுத்த வேண்டும்.

எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் மின்சார சபை மூலதன பங்களிப்பு சொத்தாக மற்றும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்பாக 2022 ஆண்டில் நிதிக்கூற்றினுள் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 48,000,000,000 ஆன அந்த மூலதன பங்களிப்பு தொடர்ந்தும் முழுமையாக எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தின் மூலதன பங்களிப்பாக மின்சார சபையின் 2022 திசெம்பர் 31 திகதிய இறுதியாண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் 149 ஆம் உறுப்புரை பிரகாரம் ஒதுக்கீட்டு அதிகார சட்டத்தினால் அங்கீகரிக்கும் பாதீட்டு மதிப்பீட்டிற்கு புரம்பாக வருமானம் சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல் அங்கீகரிக்கப்படாத போதிலும் 2020 மார்ச் 18 ஆந் திகதி முதல் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நி.பி. 876 பிரகாரம் பெற்றுக் கொள்ள வேண்டிய பாராளுமன்ற அங்கீகாரம் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 24 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நி.பி. 876 பிரகாரம், சுற்றறிக்கை வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் செயற்பட்ட நியதிச் சட்ட அல்லது நியதிச் சட்டமல்லாத பொறுப்பு நிதியததை தொடர்ந்தும் பேணிச் செல்வது தேவையில்லை என விழங்குவதாயின் அல்லது அந் நிதியத்தினால் எதிர்பார்த்த நோக்கத்தை அரச ஒதுக்கீட்டு அதிகார சட்டத்தினால் அங்கீகரிக்கப்படும் அரச வரவு செலவின் கீழ் மேற்கொள்ள முடியுமென விழங்குவதாயின், அந் நிதியத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதற்காக பாராளுமன்ற அங்கீகாரமொன்றை பெற்றுக் கொள்ள தேவையில்லை. | அரசியலைமைப்பின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**2.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி மாதம் 18 அம் திகதி நடாத்திய அமைச்சரவை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் பிரகாரம் எரிபொருள் விலை உறுதிப்படுத்தல் நிதியத்தினை வழுவுட்டுவதற்கு ரூபா 48 பில்லியன் ஆன நிதியத்தை பொது திறைசேரியிலிருந்து விடுவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு திறைசேரியின் செயலாளரிடம் கட்டளையிடப்பட்டிருந்த போதும் அக் கட்டளையை செயற்படுத்தி இருக்கவில்லை. | தறபோதயளவில் நாட்டினுள் ஏட்பட்டுள்ள பொருளாதார நெரக்கடி முன்னிலே முன்னுரிமை கடமைகள் மீது போன்று திறைசேரியின் காணப்படும் நிதி நிலைமையையும் கவனத்திற்கு எடுத்து நிதியத்தை விடவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதால் இதுவரை குறித்த ரூபா 48 பில்லியன் ஆன தொகை விடுவிப்பது மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | அமைச்சரவை முடிவுகள் பிரகாரம் நிதியத்தினை வழுவுட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஏப்ரல் 02 ஆம் திகதிய இலக்கம் 20/0684/204/060 கொண்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதற்கு உரிய சம இலக்கம் மற்றும் 2020 மார்ச் 31 திகதிய அமைச்சரவை பத்திரத்தின் 02 ஆம் பந்தி பிரகாரம், இந்த நிதியத்தின் முகாமைத்துவத்திற்காக குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதும், அம் முகாமைத்துவ குழுவின் அலுவலர்களிற்கு விநியோகித்த நியமனக் கடிதம் மற்றும் அதற்கு வழங்கிய கட்டளை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய அலுவலர்களிற்கு முறையான நியமன கடிதம் விநியோகிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நியமனம், முறையான கடிதம் ஊடாக மேற்கொள்ள வேண்டியமை மற்றும் முறையாக கட்டளை வெளியிடலை மேற்கொள்ள வேண்டியமை. |

**2.4 நிதியத்தை இஸ்தாபித்தல் மற்றும் பேணிச் செல்லல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மார்ச் 11 ஆம் திகதி வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரி செயலாளர் ஊடாக நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு பிரகாரம், 2020 மார்ச் 09 ஆம் திகதி அளவில் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | தகவல் சமர்ப்பித்தலாகும். |

சர்வதேச சந்தையில் மசகு எண்ணை விலை 42.5 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதால், அதன் போது மசகு எண்ணை பீப்பா ஒன்றின் பெறுமதி ஐ.அ.டொலர் 34.63 அளவானதாகவும், 2019 செப்தம்பர் மாதமளவில் ஐ.அ.டொலர் 59.73 எனவும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இது தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிடுகை பிரகாரம், மசகு எண்ணை விலை வீழ்ச்சியடைதல் காரணமாக எரிபொருள் ஒரு லீற்றரின் விலை பின்வருமாறு வீழ்ச்சியொன்று எதிர்பார்க்கப்பட்டு இருந்தது.

| | **பெற்றல் 92 ஒக்டேன்** | **பெற்றல் 95 ஒக்டேன்** | **ஒட்டோ டீசல்** | **சுப்பர் டீசல்** |
|---|---|---|---|---|
| **விலை சீராக்கல் (லீற்றரிற்கு) (அன்னளவாக (ரூபா)** | 12 | 15 | 14 | 20 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இந்த விலை வீழ்ச்சியின் நலன்களை, வழங்கியுள்ள வரிச் சலுகையை அறவிட்ட பின்னர் மொத்த ஏற்பாட்டையும் பொது மக்களிற்கு வழங்குதல், வரி அறவீட்டை அதிகரித்து மொத்த ஏற்பாட்டையும் அரச வருமானத்திற்கு பெற்றுக் கொள்ளல், எரிபொருட்களின் சில்லறை விலையை குறைத்தல் மற்றும் எரிபொருளின் விலையில் மாற்றமொன்றை ஏற்படுத்தாது எரிபொருள் விநியோகிக்கும் நிறுவனங்களினால் கடந்த 05 மாதங்களினுள் அடைந்துள்ள நட்டத்தை நிரப்பிக் கொள்ளலாக 04 மாற்று வழிகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | தகவல் சமர்ப்பித்தலாகும். |
| (இ) | எவ்வாறாயினும், வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பில் (ஆ) பந்தி பிரகாரம் ஒடோ டீசலிற்காக ரூபா 11 உம், பெற்றல் 95 ஒக்டன் இற்காக ரூபா 15 உம், சுப்பர் டீசலிற்காக ரூபா 20 உமாக விலை குறைந்ததன் சேமிப்பிற்காக சுங்கவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் மிகை அறவீடொன்றை விதித்தல் அல்லது சந்தை விலையை குறைக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சரின் அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டு இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | தகவல் சமர்ப்பித்தலாகும். |
| (ஈ) | அதன் பிரகாரம், 2020 மார்ச் 13 ஆம் திகதிய இலக்கம் 2166/35 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பினூடாக பின்வருமாறு எரிபொருல் தொடர்பான சுங்க வரியடன் அறவிட வேண்டிய மிகை அறவீடு 2020 மார்ச் 14 திகதி முதல் 02 மாத காலத்திற்காக வலுப்பெறும் வகையில் விதிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | தகவல் சமர்ப்பித்தலாகும். |

| | பெற்றல் 92 ஒக்டேன் ரூபா | பெற்றல் 95 ஒக்டேன் | ஓட்டோ டீசல் | சுபிரி டீசல் |
|---|---|---|---|---|
| மிகை அறவீடு (லீற்றரிக்கு) (ரூபா) | 0 | 15 | 11 | 20 |

(உ) பின்னர் சர்வதேச சந்தையின் மசகு எண்ணையின் விலை ஏற்றம் இறக்கமான சந்தர்ப்பங்களில் பின்வருமாறு மிகை பெறுமதியை அதி விஷேட வர்த்தமானியின் வெளியிடப்பட்ட கட்டளையின் ஊடாக திருத்தப்பட்டிருந்தது.

கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன்.

தகவல் சமர்ப்பித்தலாகும்.

| வர்த்தமானி இலக்கம் | திகதி | வலுப்பெறும் காலம் | பெற்றல் 92 ஒக்டேன் ரூ | பற்றல் 95 ஒக்டேன் ரூ | ஓட்டோ டீசல் ரூ | சுபிரி டீசல் ரூ |
|---|---|---|---|---|---|---|
| 2172/6 | 2020.04.22 | 02 மாதம் | 26 | 49 | 24 | 40 |
| 2181/13 | 2020.06.24 | 02 மாதம் | 0 | 20 | 12 | 30 |
| 2189/57 | 2020.08.23 | 03 மாதம் | 0 | 20 | 12 | 30 |
| 2203/1 | 2020.11.23 | 03 மாதம் | 0 | 20 | 12 | 30 |
| 2213/7 | 2021.02.01 | 2021.02.02 முதல் 2021.02.23 வரை | 0 | 0 | 0 | 0 |

(ஊ) 2021 பெப்ரவரி 01 திகதிய இலக்கம் 2213/7 கொண்ட அதி விஷேட வர்த்தமானியின் வெளியிடப்பட்ட கட்டளையூடாக 2020 நவம்பர் 23 ஆம் திகதிய இலக்கம் 2203/1 கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஊடாக பிரசுரிக்கப்பட்ட கட்டளை 2021 பெப்ரவரி 02 திகதி முதல் வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன்.

தகவல் சமர்ப்பித்தலாகும்.